# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# மூன்றாம் பத்து

## மூன்றாம் திருமொழி - வாட மருதிடை
## திருச்சித்திரகூடம் 2

** வாட மருதிடை போகி * மல்லரைக் கொன்று ஒக்கலித்திட்டு *
ஆடல் நன்மா உடைத்து * ஆயர் ஆநிரைக்கு அன்று இடர் தீர்ப்பான் **
கூடிய மாமழை காத்த * கூத்தன் என வருகின்றான் *
சேடுயர் பூம்பொழில் தில்லைச் * சித்திரகூடத்து உள்ளானே 1

பேய்மகள் கொங்கை நஞ்சுண்ட * பிள்ளை பரிசு இது என்றால் *
மா நிலமாமகள் * மாதர் கேள்வன் இவன் என்றும் ** வண்டுண்
பூமகள் நாயகன் என்றும் * புலங்கெழு கோவியர் பாடி *
தேமலர் தூவ வருவான் * சித்திரகூடத்து உள்ளானே 2

பண்டு இவன் வெண்ணெய் உண்டான் என்று * ஆய்ச்சியர் கூடி இழிப்ப *
எண்திசையோரும் வணங்க * இணை மருதூடு நடந்திட்டு **
அண்டரும் வானத்தவரும் * ஆயிர நாமங்களோடு *
திண்திறல் பாட வருவான் * சித்திரகூடத்து உள்ளானே 3

வளைக்கை நெடுங்கண் மடவார் * ஆய்ச்சியர் அஞ்சி அழைப்ப *
தளைத்தவிழ் தாமரைப் பொய்கைத் * தண்தடம் புக்கு அண்டர் காண **
முளைத்த எயிற்றழல் நாகத்து * உச்சியில் நின்று அது வாட *
திளைத்து அமர் செய்து வருவான் * சித்திரகூடத்து உள்ளானே 4

பருவக் கருமுகில் ஒத்து * முத்துடை மாகடல் ஒத்து *
அருவித் திரள் திகழ்கின்ற * ஆயிரம் பொன்மலை ஒத்து **
உருவக் கருங்குழல் ஆய்ச்சி திறத்து * இனமால் விடை செற்று *
தெருவில் திளைத்து வருவான் * சித்திரகூடத்து உள்ளானே 5

** எய்யச் சிதைந்தது இலங்கை மலங்க * வருமழை காப்பான் *
உய்யப் பருவரை தாங்கி * ஆநிரை காத்தான் என்றேத்தி **
வையத்தெவரும் வணங்க * அணங்கெழு மாமலை போலே *
தெய்வப் புள்ளேறி வருவான் * சித்திரகூடத்து உள்ளானே 6

ஆவர் இவை செய்தறிவார்? * அஞ்சன மாமலை போலே *
மேவு சினத்தடல் வேழம் * வீழ முனிந்து ** அழகாய
காவிமலர் நெடுங்கண்ணார் * கை தொழ வீதி வருவான் *
தேவர் வணங்கு தண்தில்லைச் * சித்திரகூடத்து உள்ளானே 7

பொங்கி அமரில் ஒரு கால் * பொன் பெயரோனை வெருவ *
அங்கவன் ஆகம் அளைந்திட்டு * ஆயிரம் தோள் எழுந்தாட **
பைங்கண் இரண்டு எரி கான்ற * நீண்ட எயிற்றொடு பேழ்வாய் *
சிங்க உருவின் வருவான் * சித்திரகூடத்து உள்ளானே 8

கருமுகில் போல்வதோர் மேனி * கையன ஆழியும் சங்கும் *
பெருவிறல் வானவர் சூழ * ஏழுலகும் தொழுது ஏத்த **
ஒரு மகள் ஆயர் மடந்தை * ஒருத்தி நிலமகள் * மற்றைத்
திருமகளோடும் வருவான் * சித்திரகூடத்து உள்ளானே 9

** தேனமர் பூம்பொழில் தில்லைச் * சித்திரகூடம் அமர்ந்த *
வானவர் தங்கள் பிரானை * மங்கையர் கோன் மருவார் **
ஊனமர் வேல் கலிகன்றி * ஒண்தமிழ் ஒன்பதோடு ஒன்றும் *
தான் இவை கற்று வல்லார் மேல் * சாரா தீவினை தாமே 10

**அடிவரவு:** வாட பேய் பண்டு வளை பருவம் எய்ய ஆவர் பொங்கி கருமுகில் தேனமர் ஒருகுறள்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---